**உசரத்துல உக்கார வெச்ச சம்பங்கி சாகுபடி**



கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரிலிருந்து எட்டு கி.மீ தொலைவில் இருக்கிறது தொட்டிக்குப்பம் கிராமம். இந்த ஊரைச் சேர்ந்தவரான ஜெயராமன் (04143 238897) பரம்பரையாக விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் சம்பங்கி சாகுபடியைப் பற்றி கூறுகையில் கிழங்கு மூலமாத்தான் அந்தச் செடி வளரும் வீரிய இரக ப்ரஜ்வல் அதிக மகசூல் கொடுக்கும் என்று தெரிந்து கொண்டேன். விதைக்கிழங்கு 100 கிலோ வாங்கிட்டு வந்து நடவு செய்துட்டேன். 30 சென்ட் நிலத்துல தான் சம்பங்கி நடவு செய்தேன். நடவுக்கு முன்னாடி ஏழு வண்டி தொழுவுரம் போட்டேன். ரெண்டு அடி இடைவெளியில பார் போட்டு அரை அடிக்கு ஒரு கிழங்குன்னு நட்டேன். நிலத்துல ஈரம் காயாம தண்ணிக் கட்டறது தான் இதுல முக்கியம்.
அசோஸ்பைரில்லம், பேசிலோமைசிஸ், மைக்கோரைசா அப்படின்னு உயிர் உரங்களைப் பயன்படுத்தறேன். ஒவ்வொரு உயிரி உரத்தையும் அரைக் கிலோ அளவல வாங்கிக் கலந்து, 2 மாச இடைவெளியில போட்டுகிட்டு இருக்கேன். ஒரு முறை பஞ்ச காவ்யாவையும் தண்ணியில கலந்து பாய்ச்சினேன்.
நடவு செஞ்ச மூணாவது மாசத்துல இருந்து மூணு வருஷசத்துக்கு சம்பங்கி பூத்துகிட்டே இருக்கும். இப்போ தினமும் மூணரைக் கிலோ பூ கிடைக்குது. அதிகபட்சமா கிலோ 80 ரூபாய்க்கும், குறைந்தபட்சமா 30 ரூபாய்க்கும் விலைப்போகுது. கிழங்கு, தொழு உரம், உயிர் உரம், களையெடுப்புன்னு இதுவரைக்கும் 16 ஆயிரம் செலவாயிருக்கு. இன்னிய தேதி வரைக்கும் 3 ஆயிரத்து 325 ரூபாய்க்கு பூ வித்திருக்கேன். நாளாக ஆக விளைச்சல் கூடும்.